# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br>Miscellaneous : <br>Preliminary Register : CC 558/2019<br>Sessions : <br>Deposition of Witness for : LW5/PW-2<br>Name : நெல்சன்<br>Father's/Husband's Name : ஆரோக்கியம்<br><br>Nationality : Indian | Village:<br>Age :<br>Taluk :<br><br>Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 15/07/2022**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருநீலக்குடி மாதாகோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 05/04/2015 ம் தேதி மாலை 03.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது, எனது அம்மா ரோனிக் மேரி விபத்தில் இறந்துவிட்டதாக கும்பகோணம் அரசு மருத்துவமனையில் இருந்த கிடைத்த தகவலின் பேரில் நான் மருத்துவமனை சென்றேன். நான் சென்றபோது, திருப்பனந்தாள் போலிசார் எனது அம்மாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடன் இருந்தேன். என்னையும் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்த என் தாயாருக்கு சுமார் 70 வயது இருக்கும் என்றால் சரிதான். எனது தாயார் வயது

முதிர்வின் காரணமாக அதிர்ச்சியில் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 558/2019 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW1/PW-1 | Village: |
| Name | : மரியபுஷ்பம் | Age : |
| Father's/Husband's Name | : தங்கராசு | Taluk : |
| Nationality | : Indian | |
| | | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 15/07/2022**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது திருநீலக்குடி மாதாகோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 2015 ம் வருடம் ஒருநாள் மதியம் 03.00 மணியளவில் சோழபுரம் பஸ்ஸ்டான்டில் இருந்து ஒரு ஆட்டோ மூலம் திருநீலக்குடிக்கு ஒரு இறப்பு வீட்டிற்கு நானும், எனது கொழுந்தனாரின் மனைவி ரோனிக் மேரி என்பவரும் மற்றும் ஒரு ஆண் மற்றும் இரண்டு பெண்கள் சென்று கொண்டிருந்தோம். ஆட்டோவை ஓட்டி சென்ற ஓட்டுநர் ரேடியோவில் சவுண்டை அதிகமாக வைத்து கொண்டு அதிக வேகமாக வண்டியை ஓட்டி சென்றார். வரும்வழியில் இருந்த ஒரு குட்டையில் ஆட்டோவினை வேகமாக ஓட்டி சென்று கவிழ்த்து விட்டார். விபத்தை ஏற்படுத்திய ஆட்டோ ஓட்டுநரை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய ஆட்டோ ஓட்டுநர் ஆவார். (**சாட்சி**

**எதிரியை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டுகிறார்.**) அந்த இடத்தில் இருந்த ஒரு பெண்மணி எங்களுக்கு தண்ணீர் கொடுத்தார். எனக்கு இடுப்பில் அடிபட்டது. ஜெயா என்ற பெண்மணிக்கு இடது புற விலா எலும்பில் அடிபட்டது. பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் எங்களை கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். மருத்துவமனை சென்ற பிறகு ரோனிக் மேரி என்பவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். 15 நாட்கள் சிகிச்சையில் நான் இருந்தேன். ஆட்டோவில் பயணித்த ஒரு ஆண் நபரும் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அந்த புகார் வாக்குமூலம் யார் கொடுத்தது என்று எனக்கு தெரியவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் அடிபட்டு எத்தனை நாட்கள் சுயநினைவில்லாமல் இருந்தேன் என்றால் சுமார் 10 நாட்கள் சுயநினைவில்லாமல் இருந்தேன். விபத்து நடந்ததாக சொல்லப்படும் பகுதியில் இரு பக்கமும் வயல் உள்ளது என்றால் சரிதான். சாலையின் இரு பக்கமும் வயல் இருந்ததாலும் அது மாடுகளின் மேய்ச்சல் பகுதி என்பதாலும், மாடுகள் திடீரென குறுக்கே வந்ததால் தான் ஆட்டோ கவிழ்ந்தது என்றால் சரியல்ல. மாடுகள் ஏதும் குறுக்கே வரவில்லை. நான் ஆட்டோவின் பின்புறத்தில் வலது பக்கமாக உட்கார்ந்திருந்தேன். நான் ஆட்டோவின் பின்புறம் உட்கார்ந்திருந்ததால் ஆட்டோவின் முன்புறம் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆட்டோ கவிழ்ந்த பிறகு தான் எனக்கு தெரியும். ஆட்டோ ஓட்டுநரை எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், போலிசார் அடையாளம் காட்டி தான் எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் எதிரி ஆட்டோ ஓட்டவில்லை என்றாலும், எதிரி ஆட்டோவின் உரிமையாளர் என்பதால் போலிசார் அவரை இவ்வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றாலும் , அதற்கு அனுசரணையாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஆட்டோவில் மாடு மோதியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், இறந்தபோனவருக்கும் எனக்கும் இழப்பீடு

பெறுவதற்காக எதிரி மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும், அதனால் தான் நேரத்தை முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**